IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: OS.203/2024
DEPOSITION OF WITNESS: PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | டி. லட்சுமி | Caste/ஜாதி | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | முனுசாமி கவுண்டர் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | ஈயக்குணம் கிராமம் | Religion/ சமயம் | : | |
| Taluk/தாலுக்கா | : | மேல்மலையனூர் | Age/வயது | : | 54 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 12th day of December 2024.

**முதல் விசாரணை**

நான் ஈயக்குணம் கிராமத்தில்வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 30.05.2019 இல் வழக்கு 1, 2 அயிட்டச் சொத்துக்கள் குறித்து 1ம் பிரதிவாதியின் பெயரில் மாறுதல் ஆகியுள்ள பட்டா எண்.359க்கு சிட்டா/பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.
2. 01.06.2019 இல் வழக்கு 3, 4 அயிட்டச் சொத்துகள் குறித்து 1ம் பிரதிவாதியின் பெயரில் மாறுதல் ஆகியுள்ள பட்டா எண்.401க்கு சிட்டா/பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.
3. 01.06.2019 இல் வழக்கு 5வது அயிட்டச் சொத்துகள் குறித்து 1ம் பிரதிவாதியின் பெயரில் மாறுதல் ஆகியுள்ள பட்டா எண்.131க்கு சிட்டா/பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும்.
4. 22.12.1975 இல் வாதியின் தந்தை திரு. துரைசாமி கவுண்டர் அவர்கள் பெயருக்கு, ஒரு வஜ் ஜிரவேலு செட்டியார் என்பவர் எழுதிக் கொடுத்த வழக்கு 6, 7 அயிட்டச் சொத்துகள் சம்மந்தமான பதிவு கிரையப் பத்திரம் (ஆவணம் எண்.1630/1975) சான்றிட்ட பதிவு உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகும்.
5. 12.03.1991 இல் 4-ஆம் பிரதிவாதி பெயருக்கு, 1ம் பிரதிவாதி வழக்கு 8வது அயிட்டச் சொத்துச் சம்மந்தமாக எழுதி கொடுத்த பதிவு தானச்செட்டில்மெண்ட்டு பத்திரம். (ஆவணம் எண்.182/1991) சான்றிட்ட பதிவு உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.